**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 10/2020**

Deposition of the PW3

Name : பெஞ்சமின் போஸ்கோ

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 27.04.2026.

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

நான் சித்தன்தோப்பு புனித அலங்கார அன்னை தேவலயத்தில் பங்கு அருட்பணியாளராக உள்ளேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அதன் படி ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 10.11.2019 மற்றும் 08.12.2019 ஆகிய தேதிகளில் பங்கு பேரவையில் நடந்த கூட்டத்திற்கான தீர்மானத்தின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை கொண்டு வந்துள்ளேன். மேற்படி தேதி தீர்மானங்கள் தீர்மானப்புத்தகத்தின் பக்கம் எண் 352 முதல் 356 வரை உள்ளது. மேற்படி பக்கங்களின் உண்மை நகலை இத்துடன் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் **Ex.X1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தீர்மான புத்தகத்தின் பக்கம் எண் 353 -ல் உள்ள அடித்தல் யாரால் மேற்கொள்ளப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, பாதர் தான் செய்திருக்க வேண்டும், அதில் திருத்தம் மேற்ககொண்டவர்களின் கையொப்பம் இல்லை. நான் கொண்டு வந்துள்ள அறிவிப்பு புத்தகத்தை தவிர்த்து வேறு புத்தகங்கள் உள்ளதா என்றால் ஒரு புத்தகம் உள்ளது, அதை கொண்டு வந்துள்ளேன். மேற்படி ஆவணம்

டைரி செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி டைரியில் 22.12.2019 தேதியில் அறிவிப்பு கொடுத்ததாக குறிப்புகள் உள்ளது. மேற்படி பக்கத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் அது **Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1** ஆம் பிரதிவாதியின் தரப்பு குறுக்கு விசாரணை.

1. Ex.X1 அறிக்கை புத்தகம் செயலரிடம் உள்ளது என்றால் சரிதான், Ex.X2 டைரியும் செயலரிடம் தான் இருக்கும். **Ex.X2** டைரி முன்னாள் செயலாளரான மெர்லின் பாப்பா என்பவர் மோபின் வழியாக என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். தற்போது செயலாளர் சகாய டெல்வின் என்றால் சரிதான், ஆனால் அவர் தற்போது வரை பொறுப்பேற்கவில்லை. ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் பங்கு அருட்பணியாளர்கள் வாய்மொழியாக கொடுக்கும் குறிப்புகளை செயலாளர் அவரது டைரியில் எழுத்துபூர்வமாக குறிப்பு எடுப்பார்கள் அதை நாங்கள் வாசிப்போம் என்று சாட்சிய தன்னிச்சயாக கூறுகிறார். பாதர் சகாய ஜெஸ்டஸ் எந்த புத்தகத்தை பார்த்து அறிவிப்பை வாசித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **Ex.X1** ஆவணத்தில் 32 வது கூட்ட அறிக்கையில் தலைவர், துணைதலைவர் மற்றும் செயலர் அறிக்கையை ஏற்றுக்கொண்டு கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மறைமாவட்ட சட்டங்களின் அடிப்படையில் அறிவிப்பு புத்தகம் ஒன்று தான் இருக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு பங்கு அருட்பணியாளரும் ஒவ்வொரு விதமாக புத்தங்களை வைத்திருப்பர். பாதர் சகாய ஜெஸ்டஸ் ஒரு அறிவிப்பு புத்தகம் தான் வைத்திருந்தார் என்றால் அலுவலகத்தில் ஒரு புத்தகத்தை வைத்திருந்தார் மற்றொரு புத்தகம் செயலாளரிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது. **Ex.X2** ஆவணம் மெர்லின் பாப்பாவிடம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது யாரிடம் இருந்து கொண்டு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது, மோபின் என்பவர் என்னிடம் கொடுத்தார். மோபின் என்பவரும் தற்போது வரை பொறுப்பேற்கவில்லை என்றால் சரிதான். பாதர் சகாயஜெஸ்டஸ் தனது கைவசம் வைத்திருந்த அறிவிப்பு புத்தகத்தின் 22.12.2019 தேதியிட்ட அறிவிப்பில் கிருஸ்மஸ் விழா சிறப்பு திருபலியானது 24 ஆம் தேதி 10.30 மணிக்கு நடைபெறும் என்றும் அந்த திருபலியின் போது குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கப்படும் என்றும் எல்லா திங்கள் கிழமையிலும் மாலையில் நடைபெறும் திருபலியில் திரு முழுக்கு வழங்கப்படும் என்றும் இடைப்பட்ட நாட்களில் திருமுழுக்கு கொடுப்போர் புலியுர் குறிச்சி திருத்தலத்தில் வழங்கலாம்

என்றும் சனிகிழமை காலையில் தேவைப்பட்டால் கண்டன்விளை புனித தெரசால் ஆலயத்தில் வழங்கப்படும் என்று பங்கு தந்தை அறிவிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி தேதியிட்ட பக்கம் **Ex.X3** ஆகு குறியீடு செய்யப்படுகிறது. குழித்துறை மறைமாவட்ட சட்டப்படி பரமாரிக்க படவேண்டிய முறையான ஆவணங்கள் பங்கு அருட்பணியார் அல்லது பங்கு அருட்பணி பேரவையின் பொறுப்பாளரிடம் மட்டுமே இருக்கும் என்றால் சரிதான். நான் கொண்டு வந்த ஆவணங்களில் குறிப்பிட்ட தேதியில் தனிநபருக்கு திருமுழுக்கு வழங்கலாம் என்ற அறிவிப்பு இல்லை என்றால் சரிதான். முந்தைய அருட்பணி பேரவையில் மெர்லின் பாப்பாவும், அருள் ராஜ் என்பவரும் நிர்வாக பொறுப்பில் இருந்தார்கள் என்றால் சரிதான். தற்போதும் மேற்படி நபர்கள் நிர்வாக பொறுப்பில் தேர்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்காமல் உள்ளார்கள் என்றால் சரிதான். **Ex.X2** ஆவணம் ஏற்புடை ஆவணம் இல்லை என்றாலும் அதை நான் நிர்வாக பொறுப்பில் உள்ள நபரிடம் இருந்து பெற்று தாக்கல் செய்யவில்லை என்றாலும் அந்த ஆவணத்தை பொறுத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2,3 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை தங்களது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

<u>மறுவிசாரணை</u>

**1. Ex.X3** ஆவணம் அடங்கியுள்ள புத்தகத்தின் தலைப்பு திருமண அறிவிப்பு நோட் சித்தன்தோப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புத்தகத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி புத்தகத்தின் நகல் **Ex.X4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புத்தகத்தில் முதல் பக்கத்தில் 2017 வருடத்தில் இருந்து 2021 வருடம் வரை திருமண அறிவிப்பு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு புத்தகத்தில் 2019 வருட திருமுழுக்கு சம்பந்தமான குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். மேற்படி புத்தகத்தின் பின் புறம் திருப்பி வைத்து 5 முதல் 6 தீர்மானங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், 18 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. அதில் திருமுழுக்கு சம்பந்தப்பட்ட குறிப்புகளில் வாதியின் மகளின் திருமுழுக்கு குறிப்பு மட்டுமே உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி அறிவிப்பு புத்தகத்தை நான் நேற்றைய தினம் தான் பார்த்திருப்பேன்

என்றால் சரிதான். நான் பொறுப்பேற்கும் சமயத்தில் ஆலயம் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் பொருட்கள், சொத்துக்களையும் சேர்த்து பொறுப்பேற்றேன் என்றால் சரிதான். **Ex.X2** ஆவணத்தில் ஒரு தினத்தில் உள்ள அனைத்து அறிவிப்புகளும் குறிப்பிடப்படும் என்றால் நான் அவ்வாறு பின்பற்றுகிறேன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பின்பற்றுவார்கள்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**